**OS. 56/2022**

**நாள். 05.03.2026.**

**பி.வா.சா. 1 – பாண்டித்துரை**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்துமற்றும் அத்துடன் சேர்ந்த 11 ஏக்கர் அளவுள்ள சொத்து ஆதியில் நல்லதம்பி தேவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். நல்லதம்பி தேவருக்கு ராமசாமி, இருளாண்டி என இரு ஆண் மக்கள் என்றால் சரிதான். ராமசாமி, இருளாண்டியும் தகப்பனார் வழியில் கிடைத்த சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் தாவா சொத்து உட்பட 11 ஏக்கர் அளவுள்ள சொத்தில் வடபுறம் 5 ஏக்கர் 50 சென்டு ராமசாமி தேவர் பாகத்திற்கும், தென்புறம் 5 ஏக்கர் 50 சென்டு இருளாண்டி தேவர் பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இருளாண்டி தேவருக்கு 1, 2 வாதிகளும், லெட்சுமி, கணேசன், முத்துசாமி, பாண்டித்துரை, வீரபாண்டியன் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். இருளாண்டி தேவர் தனக்கு பாகமாக கிடைத்த 5 ஏக்கர் 50 சென்டில் மேல்புறத்தில் உள்ள 1 ஏக்கர் 80 சென்டை கருப்பையா என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு இருளாண்டி தேவர் மற்றும் அவரது ஆண் மக்களான கணேசன், முத்துசாமி, பாண்டித்துரை, வீரபாண்டியன் ஆகியோர்கள் மீதமுள்ள 3 ஏக்கர் 70 சென்டில் 1 ஏக்கர் அளவுள்ள சொத்தை பாலுச்சாமி என்பவருக்கு 06.07.1972 ம் தேதியில் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மீதமுள்ள 2 ஏக்கர் 70 சென்டு சொத்துதான் தாவாவில் கண்ட சொத்து என்றால் சரிதான். என் அப்பா இருளாண்டி தேவர் உயிரோடு இருக்கும்போது மீதமிருந்த 2 ஏக்கர் 70 சென்டை பொறுத்து உயிலோ, கொடை ஆவணமோ, கிரையமோ, மற்ற எந்த ஆவணங்களும் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா 1985 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் உடன் பிறந்த சகோதரர்களான கணேசன், முத்துச்சாமி, வீரபாண்டியன் மற்றும் சகோதரி லெட்சுமி இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். லெட்சுமியின் வாரிசுகள் 1

முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். கணேசனின் வாரிசுகள்தான் பாண்டிராணி, சேகரன்(7, 8 பிரதிவாதிகள்) மற்றும் பரமேஸ்வரி என்றால் சரிதான். பரமேஸ்வரி 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து அவர்களுக்கு பிறந்த குழந்தைகள் தான் கண்ணன், கார்த்திகைஸ்வரி (9, 10 பிரதிவாதிகள்) என்றால் சரிதான். முத்துச்சாமியின் வாரிசுகள்தான் 11 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வீரபாண்டியின் மனைவி கலா (16ம் பிரதிவாதி) என்றால் சரிதான். வீரபாண்டியின் மக்கள்தான் 18 முதல் 22 பிரதிவாதி என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் 15ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்குரிய பட்டாவை ஆண்மக்களான என் பெயரிலும், மற்ற ஆண்மக்களின் வாரிசுகள் பெயரிலும் மாற்றம் செய்ததால், வாதிகள் அதை ஆட்சேபித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிகள் தங்கள் பிராதில் சொல்லியுள்ள விவரங்களை படித்துப் பாத்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதிகள் தங்கள் பிராதுடன் பட்டா மேல்முறையீடு செய்துள்ள விவரத்தை குறிப்பிட்டும், மேல்முறையீட்டு மனுவையும் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. அவ்வாறு மேல்முறையீடு செய்தது சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரிடம் செய்த மேல்முறையீடு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் இதுவரை மாவட்ட வருவாய் அலுவலரிடம் உள்ள மேல்முறையீட்டு மனுவில் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் தங்கள் பெயரையும் தாவா சொத்துக்குறிய பட்டாவில் கூட்டுப்பட்டாதாரர்களாக சேர்க்க வேண்டுமெனத்தான் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக நாங்களும், என் அப்பாவும் பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. UDR சர்வேயின் போதுதான் தாவாசொத்தான 2 ஏக்கர் 70 சென்டை பொறுத்து எவ்வித ஆவணங்களுமின்றி சர்வே எண்.211/7 முதல் 211/10 வரை உட்பிரிவு

ஆகியுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்வதற்கு முன்னர் வாதிகளுக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அறிவிப்பு கொடுக்கப்பட்டதாக எங்களுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 1, 2 வாதிகள் தாவா சொத்தை பொறுத்து எனக்கோ, மற்ற சகோதரர்களுக்கோ எவ்வித ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் ஒருபகுதி சொத்தை வா.சா.ஆ.12 மூலம் எனது மகனாக முனீஸ்வரனுக்கு இனாம் செட்டில்மென்ட் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியம் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் தாவா சொத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு எனக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 16ம் பிரதிவாதியான கமலாவின் சகோதரர் ரத்தினத்திற்கு பாத்தியமில்லை என்றால் சரிதான். மேற்படி ரத்தினம் 16ம் பிரதிவாதியான கமலத்திற்கு வா.சா.ஆ.11 மூலம் இனாம்செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தது தவறு என்றால் சரிதான். என் சகோதரர் முத்துச்சாமி வா.சா.ஆ-14 மூலம் நாகலிங்கம் என்பவருக்கு தாவா சொத்தின் ஒருபகுதி சொத்தை பூர்வீகம் என குறிப்பிட்டுத்தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அதுபோல என் மற்ற சகோதரர்களும், அவரது வாரிசுகளும் தாவா சொத்து பூர்வீக சொத்து என்று கிரையம் மற்றும் இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். இனாம் மற்றும் கிரைய ஆவணங்களில் பாகம் பிரிக்கப்பட்டதில் எங்களுக்கு கிடைத்த சொத்து என எழுதிக்கொடுத்தவர்கள் கூறி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். 10.05.1980ம் தேதி தாவா சொத்தை பொறுத்து பாகம் ஏற்பட்டதாக எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளதை உறுதிபடுத்துவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ யார் முன்னிலையில் பாகம் பிரித்துக்கொண்டோம்,

எந்தெந்த பகுதி சொத்து யாருக்கு பாகமாக வைக்கப்பட்ட என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக 10.05.1980ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் இருளாண்டியின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இருளாண்டி தேவருக்கு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பெரும்பகுதி தரிசாக உள்ளது என்றால் சரியல்ல, கிணறு வெட்டி மின்இணைப்பு பெற்று தென்னந்தோப்பாக உள்ளது. அவ்வாறு வேலி அடைத்து கிணறு வெட்டி மின்இணைப்பு பெற்று தென்னந்தோப்பாக உள்ள விவரத்தை எங்களுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் கேட்டுள்ள பாகஉரிமையை பொறுத்து என்னைத்தவிர இருளாண்டி தேவரின் மற்ற வாரிசுகளின் மக்கள் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரி 1ம் வாதி பாண்டியம்மாள் வழக்கு தாக்கல் செய்த பிறகு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள்தான் 3 முதல் 6 வாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்தில் தங்களுக்குரிய பாகத்தை பிரித்து தரக்கோரி 1, 2 வாதிகள் எனக்கும், என் மற்ற சகோதரர்களின் வாரிசுகளுக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்பதை உறுதிபடுத்துவதற்கு அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. தாவா சொத்தில் 2ம் வாதிக்கு 1/7 பங்கும், 3 முதல் 6 வாதிகளுக்கு 1/7 பங்கும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் சகோதரிகளுக்குரிய பங்கை தர மறுத்ததால்தான் அவர்கள் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், 1980ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை என் சகோதரிகள் பங்கு கேட்டுவரவில்லை. அவ்வாறு வாதிகள் பங்கு கேட்டு வரவில்லை என எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ

சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வாதிகள் பங்கு கேட்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்த பிறகுதான் என் பெயரில் 2022ம் ஆண்டில் பட்டா மாற்றி பி.வா.சா.ஆ.5 ஐ உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு தலா 1/7 பங்கும், 3 முதல் 6 வாதிகளுக்கு 1/7 பங்கும் உள்ளது என்றும் அதனால் அவர்கள் வழக்கில் கேட்டுள்ளவாறு பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.